# GROUP I MAIN - 2023

# PROFIT & LOSS WORK SHEET

1. The amount for which an article is bought is called its cost price (C.P).
எந்த விலைக்கு ஒரு பொருள் வாங்கப்படுகின்றதோ அதனை அடக்க விலை என அழைப்பர்

2. The amount for which an article is sold is called its selling price (C.P)
எந்த விலைக்கு ஒரு பொருள் விற்பனை செய்யப்படுகின்றதோ அதனை விற்பனை விலை என அழைப்பர்

3. If S.P > C.P, then there is profit or gain
Profit = S.P – C.P (லாபம் = S.P – C. P)
$\text{Profit } \% = \frac{\text{Profit}}{\text{C.P}} \times 100\%$ $\left(\text{லாபம் } \% = \frac{\text{லாபம்}}{C.P} \times 100\right)$
S.P > C.P எனில் அங்கு லாபம் அல்லது ஆதாயம் இருக்கும்

4. If S.P < C.P, then there is a loss
Loss = C.P – S.P (நட்டம் = C. P - S.P)
$\text{Loss } \% = \frac{\text{Loos}}{\text{C.P}} \times 100\%$ $\left(\text{நட்டம் } \% = \frac{\text{நட்டம்}}{C.P} \times 100\right)$
S.P < C.P எனில அங்கு நட்டம் இருக்கும்

5. $\text{S.P} = \frac{100 + \text{Profit}}{100} \times CP$
$\text{S.P} = \frac{100 + \text{லாபம்}}{100} \times C.P$

6. $\text{S.P} = \frac{100 - \text{Loos}}{100} \times CP$
$\text{S.P} = \frac{100 - \text{நட்டம்}}{100} \times C.P$


7. SP = Marked Price – Discount
S.P = குறிக்கப்பட்ட விலை – தள்ளுபடி

8. Total CP = CP + Over head Expenses
மொத்த C.P = C.P + மேல்நிலை செலவுகள்

9. A man buys x tables for Rs. y and sells w tables for Rs. z, then % Profit = $\left(\frac{xz}{wy}-1\right)\times 100\%$

ஒரு மனிதன் x மேஜைகளை ரூ y-க்கு வாங்கி w மேஜைகளை ரூ z-க்கு விற்பனை செய்கின்றார் எனில் லாபம் $\left(\frac{xz}{wy}-1\right)\times 100$

அளவு C.P / S.P




10. If the CP x articles equals the SP of w articles, then % Profit = $\frac{x - w}{w}\times 100\%$

x பொருட்களின் CP, w பொருட்களின் SP-க்கு சமம் எனில் % லாபம் = $\frac{x-w}{w}\times 100\%$

1. A shopkeeper buys a toy for Rs. 250 and sells it for Rs. 285. Find his gain and gain Percent
ஒரு கடைக்காரர் ஒரு பொம்மையை ரூ.250-க்கு வாங்கி ரூ. 285-க்கு விற்பனை செய்கின்றார். அவரின் லாபத்தையும், லாப சதவீதத்தையும் காண்க?

2. Ram bought a wrist watch for Rs. 2200 and sold it for Rs. 1980. Find his loss and loss percent.
ராம் ரூ. 2200-க்கு ஒரு கை கடிகாரத்தை வாங்கி ரூ.1980-க்கு விற்பனை செய்கின்றார். அவரின் நட்டத்தையும், நட்ட சதவீத்தையும் காண்க?

3. If the SP of a LED Tv is equal to $\frac{5}{4}$ of its C.P, then find the Profit Precent.
ஒரு LED தொலைக்காட்சி பெட்டியின் SP அதன் CP-ன் $\frac{5}{4}$ மடங்கிற்க்கு சமம் எனில் லாப சதவீதம் காண்க

4. By selling bicycle for Rs. 4275, a shopkeeper losses 5%. For how much should he sell it to have a profit of 5%?
ஒரு மிதிவண்டியை ரூ. 4275-க்கு விற்பதினால் ஒரு கடைக்காரர் 5% நட்டம் அடைகின்றார். எந்த விலைக்கு விற்பனை செய்திருந்தால் அவர் 5% லாபம் பெற்றிருப்பார்.

5. Ram bought a washing machine for Rs. 16150 and Paid Rs 1300 for its transportation. The he sold it for Rs. 19250. Find his gain or loss %
ராம் ஒரு துணி துவைக்கும் இயந்திரத்தை ரூ. 16150 கொடுத்து வாங்குகின்றார் மற்றும் அதன் போக்கு வரத்திற்கு ரூ. 1300 செலுத்துகின்றார். பின்பு அவர்

அதனை ரூ 19,250-க்கு விற்பனை செய்கின்றார் அவரின் லாபம் அல்லது நட்ட % காண்க?

6. A Per-owned can was bought for Rs. 240000. On repairs Rs. 15000 was spent, Rs. 8500 was for its nuisance. Then was sold for Rs. 258230.What is the gain %?
முன்பு சொந்தமான ஒரு கார் ரூ.240,000-க்கு வாங்கப்படுகின்றது. பழுதுபார்க ரூ. 15000 செலவிடப்படுகின்றது. ரூ. 8500 காப்பீடிற்காக செலவிடப்படுகின்றது பின்பு ரூ.258230-க்கு விற்பனை செய்யப்படுகின்றது லாப % என்ன?

7. The cost price of 16 boxes of strawberries is equal to the selling price of 20 boxes of strawberries. Find the gain or loss percentage.
16 ஸ்டராபெரி பழம் பெட்டிகளின் அடக்க விலை 20 ஸ்டராபெரி பழப் பெட்டிகளின் விற்பனை விலைக்கு சமம். லாபம் அல்லது நட்ட சதவிதம் காண்க.

8. The CP of 18 mangoes is the same as the SP of 16 mangoes.Find the gain %
18 மாம்பழங்களின் CP-யும் 16 மாம்பழங்களின் SP-யும் ஒன்றே லாப % காண்க

9. A girl buys lemons at 4 for Rs. 3 and sells them at 5 for Rs. 4 How much percent loss or gain does she make.
ஒரு சிறுமி எலுமிச்சைப்பழங்களை 4, ரூ. 3 என வாங்கி 5 ரூ. 4 என விற்பனை செய்கின்றாள். அவள் பெற்ற லாப அல்லது நட்ட சதவீதம் காண்க.

10. A Woman bought some eggs at the rate of 4 eggs for Rs. 18 and sold at the rate 5 eggs for Rs. 24 she gained Rs. 90 in selling all the eggs. How many eggs did she buys?
ஒரு பெண் சில முட்டைகளை 4 முட்டைகள் ரூ. 18 என வாங்கி 5 முட்டைகள் ரூ. 24 என விற்பனை செய்வதினால் ரூ. 90 லாபம் பெறுகின்றாள். எத்தனை முட்டைகளை அவள் வாங்கினாள்.

11. A Person sells an article for Rs. 550, gaining $\frac{1}{10}$ of its C.P. Find gain %
ஒரு நபர் ஒரு பொருளை ரூ. 550-க்கு விற்பனை செய்கின்றார், அதன் CP-ன் $\frac{1}{10}$ லாபம் பெறுகின்றார் லாப % காண்க

12. 200 kg of sugar was purchased at the rate of Rs.15 per kg and sold at a profit of 5% compute the profit and SP per kg.
200 கிலோ சக்கரை, கிலோ ரூ. 15 எனும் விலையில் வாங்கப்படுகின்றது. பின்பு 5% லாபத்தில், விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோவிற்கான லாபத்தையும் விற்பனை விலையையும் காண்க.

13. A man sold two articles at Rs.25920 each. There were sold at 8% gain and 4% loss respectively. Find the gain or loss % in the whole transaction.
ஒரு மனிதன் இரண்டு பொருட்களை ஒன்வொன்றையும் ரூ. 25920-க்கு விற்பனை செய்கின்றார். அவை 8% லாபத்திற்கும் 4% நட்டத்திற்கும் விற்பனை செய்யப்படுகின்றது. மொத்த பரிவர்த்தனையில் லாபம் அல்லது நட்ட சதவீதம் காண்க?

14. By selling a stool for Rs. 67.50, a carpenter loses 10%. How much percent would he gain or lose by selling it for Rs. 82.50?
ஒரு மரச்சாமானை (stool) ரூ. 67.50-க்கு விற்பனை செய்ததில் ஒரு தச்சன் 10% நட்டம் அடைகின்றார். அதனை ரூ. 82.50-க்கு விற்பனை செய்தால் அவர் பெறும் முழு லாபம் அல்லது நட்ட சதவீதம் என்ன?

15. By reducing the S.P of an article by Rs. 50, a gain of 5% turns into a loss of 5%. Find the original SP of the article?
ஒரு பொருளின் விற்பனை விலையை ரூ. 50 குறைப்பதினால், ஒரு 5% லாபம் 5% நட்டமாக மாறுகின்றது. அப்பொருளின் உண்மையான SP காண்க?

16. Find SP of MP = Rs. 650 and discount 10%
MP = ரூ. 650 மற்றும் தள்ளுபடி 10% இதன் SP காண்க?

17. Find the M.P if S.P = Rs.3430 and discount 2%
S.P = ரூ. 3430 மற்றும் தள்ளுபடி 2% எனில் M.P காண்க?

18. Find discount is percent when MP = Rs. 625 and SP = Rs. 562.5
M.P = ரூ. 625 மற்றும் S.P = ரூ.562.5 எனில் தள்ளுபடி காண்க?

19. A Shopkeeping offers his customers 10% discount and still maker a Profit of 26% what is the actual cost to him of an article mated Rs. 280?
ஒரு கடைக்காரர் தனது வாடிக்கையாளர்களுக்கு 10% தள்ளுபடி அளிக்கின்றார். இருப்பினும் 26% லாபம் பெறுகின்றார். ரூ. 280 எனக் குறிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவர் செலவிடும் தொகை எவ்வளவு?

20. A dealer buys an article for Rs. 380. At what Price must he mark it so that after allowing a discount of 5%, he still makes a profit of 25 %?
ஒரு வியாபாரி பொருளை ரூ.380 கொடுத்து வாங்கின்றார். என்ன விலைக்கு அதைக் குறித்தால் 5% தள்ளுபடி செய்த பின்னும் 25% லாபம் பெறுவார்.

21. A tradesman allows a discount of 15% on the written price. How much above the CP must he mark his goods to make a profit of 19%?
ஒரு வர்த்தகர் எழுதப்பட்ட விலையில் 15% தள்ளுபடி செய்கின்றார். 19% லாபம் பெற CP-யை விட எவ்வளவு அதிகமாக அவர் தனது பொருட்களை குறிக்கவேண்டும்?